**செய்தி வெளியீடு எண்: 572** **நாள்: 02.10.2012**

# <u>ஐந்து காவல்துறை அதிகாரிகளுக்கு</u>
# <u>காந்தியடிகள் காவல் பதக்கங்கள்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, **1)** திருமதி. நா. தேவராணி, காவல் கண்காணிப்பாளர், மத்தியப் புலனாய்வுப் பிரிவு, சென்னை, **2)** திரு.ஐ. ஈஸ்வரன், காவல் கண்காணிப்பாளர், வேலூர் மாவட்டம், **3)** திருமதி. எஸ். விமலா, காவல் கூடுதல் துணை ஆணையாளர், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு (தெற்கு மண்டலம்), சென்னை, **4)** திரு. கு. சக்திவேல், சிறப்பு உதவி ஆய்வாளர், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, அரூர், தருமபுரி மாவட்டம் மற்றும் **5)** திரு. க. ஸ்டாலின் சந்திரசேகர், தலைமைக் காவலர், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, மாதவரம், சென்னை ஆகியோருக்கு, கள்ளச் சாராய ஒழிப்புப் பணியில் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியமைக்காக காந்தியடிகள் காவலர் விருதுகள் வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன விருதுகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **2013**–ஆம் ஆண்டு குடியரசு தினத்தன்று வழங்கப்படும். இவ்விருதை பெறுபவர்களுக்கு பதக்கங்களுடன் பரிசுத் தொகையாக தலா ரூ.**20,000/**–மும் வழங்கப்படும்.

ரா. ராஜகோபால்
அரசு முதன்மைச் செயலாளர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**